# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் **17.06.2025**</u>

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். CP 4525/SCIC/2023</u>**

திரு நாஞ்சில் C மனோகரன் புகார்தாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
வருவாய் கோட்டாட்சியரின்
நேர்முக உதவியாளர், --- பொது அதிகார அமைப்பு
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
தாம்பரம், செங்கல்பட்டு மாவட்டம்.

**<u>ஆணை</u>**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 06.10.2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தாம்பரம் என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். 10.02.2023 தேதியிட்ட தனது புகார் மனு குறித்து 4 இனங்களில் தகவல்கள் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் 07.12.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் 30.11.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அதனையடுத்து மனுதாரர் 26.12.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 18(1)ன் கீழ் புகார் மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப்பெற்ற ஆணையம் CP 4525/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன புகார் மனு குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு

அறிவுறுத்தப்பட்டதன் பேரில், 12.02.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். மனுதாரர் 25.03.2025 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த புகார் மனுவின்மீது நேரடி விசாரணை செய்யும்பொருட்டு, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் 17.06.2025 தேதியிட்ட நேரடி விசாரணைக்கு ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் மனுதாரருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்றைய நேரடி விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு சி. ஸ்ரீதர், பொதுத் தகவல் அலுவலர் / வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தாம்பரம், சென்னை நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணையின்போது **பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் மனுவில் கோரிய விவரங்களுக்கு தங்கள் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் 07.12.2023 தேதியிட்டு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்களை ஆணையம் ஏற்கிறது. இருப்பினும், மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான 06.10.2023 தேதியிட்ட மனுவிற்கு பொதுத் தகவல் அலுவலரால் 07.12.2023 தேதியிட்டு காலதாமதமாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது தெளிவாகிறது. இதில் ஏற்பட்டுள்ள காலதாமத்திற்கு பொறுப்பான அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு சிவசங்கரன், வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், தாம்பரம் என்பவர் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான அவரது விளக்கத்தினை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மேற்படி அலுவலரிடமிருந்து பெற்று, 31.07.2025 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4525/SCIC/2023</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

வருவாய் கோட்டாட்சியரின்
நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
தாம்பரம், செங்கல்பட்டு மாவட்டம்.

திரு சிவசங்கரன்,
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
தாம்பரம், செங்கல்பட்டு மாவட்டம்.
.

**<u>மனுதாரர்:-</u>**

திரு நாஞ்சில் C மனோகரன்,
எண்.11, சாந்தி நகர் முதல் குறுக்குத்தெரு,
கௌரிவாக்கம், சென்னை 600 073.

நகல்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

Copy to: File TK/PS